**_World Christian Fellowship_**
www.wcflondon.com
wcflondon@gmail.com

# *கலாத்தியர்*

## *பாடம் 17 பரிசுத்த ஆவியானவர்*

## இக்கால திருச்சபை பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துலில்லாமல் –

## *Present day churches without the leading of Holy Spirit*

***கலாத்தியர் 3:1-3, புத்தியில்லாத கலாத்தியரே, நீங்கள் சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமற்போகத்தக்கதாக உங்களை மயக்கினவன் யார்? இயேசுகிறிஸ்து சிலுவையிலறையப் பட்டவராக உங்கள் கண்களுக்குமுன் பிரத்தியட்சமாய் உங்களுக்குள்ளே வெளிப்படுத்தப்பட்டிருந்தாரே. 2. ஒன்றை மாத்திரம் உங்களிடத்தில் அறியவிரும்புகிறேன்; நியாயப் பிரமாணத்தின் கிரியைகளினாலேயோ, விசுவாசக் கேள்வியினாலேயோ, எதினாலே ஆவியைப் பெற்றீர்கள்? 3. ஆவியினாலே ஆரம்பம்பண்ணின நீங்கள் இப்பொழுது மாம்சத்தினாலே முடிவுபெறப்போகிறீர்களோ? நீங்கள் இத்தனை புத்தியீனரா?***

*தேவ ஆவியானவர் அவரை விசுவாசிப்பவர்களுக்கு வரங்களை கொடுக்கிறார். சரீரமாகிய சபையை கட்டி எழுப்ப விசுவாசிகள் மூலமாய் வெளிப்படையாக அந்த வரங்கள் மூலம் கிரியைகள் செய்கிறார்சபையின் வாழ்க்கை மற்றும் கிறிஸ்துவின் சரீரமாகிய அதில் பரிசுத்த ஆவியானவர் ஒரு முக்கிய மைய புள்ளி ஆவார்.*

*கிறிஸ்துவில் நம்முடைய வாழ்க்கை பரிசுத்த ஆவியானவராலே துவக்கப்படுகிறது என்பதை கிறிஸ்தவர்கள் அறிந்து இருக்க வேண்டும்.*

***1 கொரிந்தியர் 12:3, ஆதலால், தேவனுடைய ஆவியினாலே பேசுகிற எவனும் இயேசுவைச் சபிக்கப்பட்டவனென்று சொல்லமாட்டானென்றும், பரிசுத்த ஆவியினாலேயன்றி இயேசுவைக் கர்த்தரென்று ஒருவனும் சொல்லக்கூடாதென்றும், உங்களுக்குத் தெரிவிக்கிறேன்.***

*நாம் ஆவிக்குரியவர்கள் ஆனதால் நாம் ஒருபோதும் மாம்சத்தால் பரிபூரணம் அடைய முடியாது!*

*கலாத்திய சபையில் நடந்தார் போன்றே அறிந்தோ அறியாமலோ இன்றைய சபைகளில் நடைமுறைக்கு ஏற்றோர் போல் உபதேசங்கள் மாறி ஆவியில் தொடங்கி மாம்சத்தின் மூலம் முடிக்க முடியும் என்றார் போன்ற விசுவாசத்திற்குள்ளாக வழிநடத்தப்படுகின்றனர்,!*

*சுத்திகரித்தல் என்பது பரிசுத்த ஆவியானவரின் வல்லமையால் மட்டுமே என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என பவுல் விரும்பினார். நீங்கள் விசுவாசத்தால் இரட்சிக்கப்பட்டதால், நீங்கள் விசுவாசத்தின் மூலமே நிலை நிறுத்தப்பட்டு, மற்றும் பரிபூரணமாக்க படுகிறீர்கள்.*

*ஆவியானவரின் இரட்சிப்பின் கிரியைகளை விசுவாசித்த நீங்கள் அவரின் சுத்திகரிக்கும் கிரியைகளையும் விசுவாசிக்க வேண்டும். ஆவியில் துவங்கி நித்திய வாழ்க்கைக்கு சென்றவர்கள் அதை மாம்சத்தின் மூலம் அடையவில்லை.*

பவுல் அவர்களை முதல் மற்றும் மூன்றாம் வசனத்தில் புத்தியில்லாதவர் என்று அழைப்பதில் ஆச்சரியம் இல்லை. ஏன்?

அவர்கள் புத்தியில்லாதவர்கள் ஏனென்றால் அவர்கள் ஆரம்பத்தில் அவர்களின் இரட்சிப்புக்காக தேவனை மற்றும் பரிசுத்த ஆவியானவரை விசுவாசித்தர்கள், பிறகு கிருபையின் சுவிசேஷத்தில் மனுஷருடைய கிரியைகளை சேர்ப்பதன் மூலம் சுத்திகரிப்பு அடையலாம் என கலப்பு செய்ய ஒத்துழைத்தனர்.

- சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவை விசுவாசிப்பதன் மூலம் ஒருவர் நித்திய இரட்சிப்பை பெற்று இருப்பார் ஆனால்,
- ஒருவர் இரட்சிக்கப்படும் போது உள்ளே வாசம் செய்யும் பரிசுத்த ஆவியானவரின் முழு அனுபவத்தை பெற்று இருப்பாரானால்,
- ஒருவர் தமக்குள் பரிசுத்த ஆவியானவர் வாசம் செய்வதை தக்கவைத்து கொள்ளும், தன்னுடைய எல்லா கிறிஸ்தவ அனுபவத்தில் இருப்பாரானால்,

பிறகு ஏன் அவர் உலகில் இப்படி இயற்க்கைக்கு அப்பாற்ப்பட்ட அற்புதங்களை செய்யும் வல்லமையை விட்டுவிட்டு மனித முயற்சியால் முழுமை பெற பெற விரும்புகிறார்?

நீங்கள் ஆவிக்குரிய முதிர்ச்சி அல்லது முழுமையை இயற்கை முறையில் அடைய முடியாது.

பரிசுத்த ஆவியானவர் இல்லாமல் ஒருவரும் மீண்டும் பிறக்க முடியாது.

பரிசுத்த ஆவியானவரின் நிலையான, சுத்திகரிக்கும், தக்கவைக்கும், பாதுகாக்கும் வேலை மட்டும் இல்லையென்றால் கிறிஸ்தவர்களின் ஆவிக்குரிய வழக்கை என்பது செத்ததாகவே இருக்கும்.

போலி கிறிஸ்தவமார்கள் இன்றைய காலங்களில் சபைக்குள் ஊடுருவி விட்டதால் எல்லாம் இப்பொழுது மனிதர்களை மையமாக கொண்டு நடக்கும் அவல நிலை உள்ளது.

ரோம கத்தோலிக்க சபையானது அரசியல் சார்ந்த நிறுவனமாக மாறி விட்டது அதுமட்டுமில்லாமல் கி.பி500 லிருந்து 1500வரை, 1000 வருடத்தில் ஒரு மதமாக மாறிவிட்டது. இந்த காலகட்டம் சபையின் வரலாற்றில் ஒரு கருப்பு யுகமாக கருதப்படுகிறது. இந்த காலகட்டத்தில் தான் மேற்கத்திய கலாச்சாரங்கள் சபைக்குள் நுழைந்தது.

மனிதர்களின் முன்னேற்றம் என்பது இப்பொழுது பரந்து இருப்பது போன்று அச்சகம் மற்றும் பெரிய தொழில் நுட்ப வசதிகள் அப்போது இல்லை. எனவே மக்கள் அறியாமையினால் முன்னேற்றத்தை நோக்கி செல்ல முடியவில்லை.

எனவே 15 மற்றும் 16ம் நூற்றாண்டுகளில் சீர்திருத்தம் நடைபெற்றது. அந்த சீர்திருத்தம் சுயமாக யோசிக்கும் திறனை வெளிக்கொணர்ந்தது. அந்த சீர்திருத்தம் ரோமர்களின் சங்கிலியை முறித்தது. இந்த சுயமாக யோசிக்கும் திறன் உடனடியாக அடுத்த இரண்டு நூற்றாண்டுகளில் படைப்பாற்றலை கொண்டுவந்தது.

மக்கள் படைப்பாளிகளாக மாறி அச்சகங்களை கண்டு பிடித்தனர் (printing press). இது மறைவிடங்களில் மக்களால்

*பதுக்கி வைக்கப்பட்டிருந்த மிக அதிக அளவிலான நூல்களை, இலக்கியங்களை வெளியே கொண்டு வந்தது. அதனால் மக்கள் உண்மைகளை கற்றுக்கொண்டு, விமர்சிக்க, மற்றும் மதிப்பீடு செய்ய உதவி செய்தது.*

*அது ஒரு முன்னுதாரணமான மாற்றம் ஆகும்!*

*அந்த காரிருளான யுகத்தை தொடர்ந்து அறிவுக்கான யுகம் ஆரம்பித்தது!*
*கிறிஸ்தவத்தில் மட்டுமல்ல மற்ற எல்லா மனித குலத்திற்கும் தான். தொழில்துறையில் மாற்றம் உச்சத்தை அடைந்து புதிதான சிந்தனைகள் மற்றும் கண்டுபிடிப்பிற்கு வழிவகுத்தது மற்றும் புதிய கண்டுபிடிப்புகள் மனித குலத்தின் வாழ்க்கை முறையை புதிதாக வடிவமைத்தது. மனிதனின் படைப்பாற்றல் மற்றும் கண்டுபுடிக்கும் திறன் பகுத்தறிவிற்கு வழி வகுத்தது.*

*பகுத்தறிவு (Rationalism) என்றால் என்ன? மற்றும் அதனால் என்ன நடந்தது?*
*மனிதனின் அறிவை புகழ்வது, ஆராதிப்பது!*

*திடீரென மனிதனுக்கு அவனுக்குள்*
- ✓ *எல்லா விதமான கருத்துக்கள்,*
- ✓ *எல்லா விதமான உருவாக்கும் ஞானம்,*
- ✓ *எல்லா விதமான உருவாக்கும் திறமை*
- ✓ *எல்லா விதமான அற்புதமான காரியங்களும் இருப்பதை கண்டுபிடித்தான்*

*அதனால் இந்த உலகை தனது கட்டுப்பாட்டில் வைக்க துவங்கினான்.*

*அந்த பகுத்தறிவு, மனிதனின் சிந்தனை தான் கடவுள் என்று கூற ரொம்ப நாள் எடுத்துக்கொள்ளவில்லை.*

*"ஏஜ் ஆப் ரீசன்" "Age of Reason" என்ற பிரசித்தி பெற்ற நூல் அந்த காலகட்டத்தில் இருந்தது.*

*இந்த புத்தகம் வேதாகமம் சரியல்லவென்றும் மனிதனின் சிந்தனை தான் மிக பெரிய கடவுள் என்று கூறியது.*

***பகுத்தறிவினால் பிறந்தது என்ன?***

*பகுத்தறிவினால் பிறந்தது தாராளமான (Liberal Theology) கொள்கைகள் தான் (பரந்த கொள்கைகள்).*

***இந்த பரந்த கொள்கைகள் (Liberal Theology) என்ன செய்கின்றன?***

*அது மீண்டும் வேதாகமத்தை நோக்கி சென்றது, எதுவெல்லாம் பகுத்தறிவோடு இல்லாமல் இருக்கிறதோ அதையெல்லாம் சபையை விட்டு தூக்கி எரிய சொல்லிற்று.*
*மனிதன் தன்னுடைய சிந்தனையை, அறிவை ஆராதிக்க துவங்கினான்.*

*எப்பொழுதெல்லாம் ஒரு பெரிய சாதனை நடக்கிறதோ அப்பொழுது மனிதன் அது இயற்கைக்கு அப்பாற்பட்டது என்று நினைப்பதை விட்டு விட்டு தன்னுடைய சிந்தனையின் அளவில்லா திறனை முன் வைக்க துவங்கினான்.*

*நாம் இப்பொழுது அதிநவீன, சிக்கலான, முன்னேற்றம் அடைந்த மற்றும் அற்புதமான மனித கலாச்சாரத்தில் வாழ்கிறோம். மனிதன் தன்னுடைய அறிவை விரும்பி*

*அதற்கு ஆராதனை செய்து, எழுத்து ரீதியாக அகந்தை கொண்டவனாய் மாறிவிட்டான்.*

*மனிதன்,*

- ✓ *திறமைமிக்கவனாய்,*
- ✓ *கற்பனை திறன் கொண்டவனாய்,*
- ✓ *எல்லா திறமையும் கொண்டவனாய் மாறி விட்டான்*

*எல்லாவற்றிற்கும் தன்னிடம் பதில் இருப்பதாக நினைக்க ஆரம்பித்தான்.*
*மனிதனின் பிரமிக்கத்தக்க கலாச்சாரத்தை உருவாக்கிய சாதனை, அவனை தன்னுடைய திறன் எல்லாவற்றிலும் பெரியது என்று நினைக்க தூண்டியது.*

*விளைவு: மனிதன் தனக்கு தேவையான எல்லா பதில்களையும், தன்னுடைய திட்டங்களுக்கான விடைகளையும் தன்னுள்ளே தேடிக்கொண்டான்.*
*இதை உங்களுக்கு விளக்க, உருவகப்படுத்த வேண்டுமானால் ஜெபத்தை வைத்து கூறலாம்.*

***மக்களுக்கு ஏன் ஜெபத்தின் மீது ஈடுபாடு இல்லை?***
***சபை ஏன் ஜெபத்தின் மூலம் மக்களிடமிருந்து ஒரு ஈர்ப்பு பெறவில்லை?***
***ஏன் தனி மற்றும் கூடி ஜெபித்தலில் ஆர்வம் இல்லை?***

*ஏனென்றால் அது தற்பெருமை!*
*தன்னுடைய எல்லா பிரச்சனைகளையும் தன்னால் தீர்த்து கொள்ள முடியும் என்ற தன்னிலை சார்ந்த எண்ணம்.*

*என்னுடைய பிரச்சனைகளை என்னால் தீர்த்து கொள்ள முடியும் மற்றும் என்னிடம் விடை உள்ளது என்றால் பிறகு நான் ஏன் ஜெபிக்க வேண்டும்?*

*ஒன்றை நினைவில் வைத்து கொள்ளுங்கள் மனிதனுக்கு*

- ✓ *ஜெபத்தை குறித்த கோட்பாடு தெரியாமல் இல்லை,*
- ✓ *ஜெபிக்க வேண்டும் என்ற கட்டளை தெரியாமல் இல்லை,*
- ✓ *ஜெபத்தின் விளைவுகள் தெரியாமல் இல்லை மற்றும்*
- ✓ *அதன் தேவை தெரியாமல் இல்லை.*

***எதற்கு ஜெபிக்க வேண்டும்?***

*அன்றன்றுள்ள அப்பத்தை எங்களுக்கு தாரும்!*

*என்ன விளையாடறிங்களா?*

*எனக்கு வேண்டிய அளவை விட அதிகமாகவே தினமும் எனக்கு அப்பம் கிடைக்கிறது.*

***நமக்கு என்ன தேவை?***

*எல்லா பிரச்சனைகளையும் சமாளிக்கும் திறமைகள் சாதனங்கள் நம்மிடம் உள்ளது.*

*இந்த காரணத்தினால் தான் ஜெபிக்க மறுக்கிறோம்.*

***2 கொரிந்தியர் 10:4, நாங்கள் மாம்சத்தில் நடக்கிற வர்களாயிருந்தும், மாம்சத்தின்படி போர்செய்கிறவர்களல்ல.4. எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவை களாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்கு தேவபலமுள்ளவைகளாயிருக்கிறது.***

*நாம் மாம்சத்தில் இருந்து கொண்டு ஆவிக்குரிய போராட்டத்தை போராடி கொண்டு இருக்கிறோம்.*

*ஜெபத்திற்கான தேவையை மற்றும் பரிசுத்த ஆவியை சார்ந்து வாழும் தேவையை நாம் உணர்ந்து கொள்ளாமல், அதின் மேல் உள்ள ஈடுபாட்டை இழந்தோம்.*

*அதனால் தான் அவர்கள் உங்களுக்கு ஏதாவது பிரச்சனையா உங்களை நீங்களே ஆராய்ந்து பாருங்கள் என்று மக்களை பார்த்து சொல்லுகிறார்கள். உங்களுக்குள்ளே ஆழமாக போய் பாருங்கள்.*

*சபையை பாருங்கள்!*
*சபை வளருவதில் சில ஒழுங்கு முறைகள் உள்ளது!*

*சபையை வளர்ப்பதற்கு உங்களிடம் ஏதேனும் யுக்தி உள்ளதா?*
*சபை வளர்ப்பது எப்படி போன்றவற்றை பேசும் மாநாடுகள் நடக்கின்றன!*
*அவர்கள் என்னத்தை பேசுகிறார்கள்?*
*வேதம் சொல்லுகிறது இரட்சிக்கப்படுகிறவர்களை தேவன் அனுதினமும் சபையில் சேர்த்துக்கொண்டு வந்தார் என்று.*

***சபையை வளர்ப்பது யார்?***
***சபையை வளர்ப்பது எப்படி என்ற அமைப்புகள் மீது நம் நம்பிக்கை உள்ளதா?***
***மனிதனின் புத்திசாலித்தனத்தால் நடக்குமா?***

*சமுதாயம் நல்லவைகளில் அதிகமாக வளர்ந்து மற்றும் ஒரு தேவையும் இல்லாமல், எல்லாவற்றிற்கும் ஒரு அமைப்பை கண்டு பிடித்துவிட்டது.*

*சமுதாயமும் சபையும் இப்பொழுது தன்னை தான் சார்ந்து கொள்ளும் தன்மையில் சிக்கி கொண்டது.*

*சபையில், குடும்பத்தில் மற்றும் தனிப்பட்ட வாழ்க்கையில் உள்ள பிரச்சனைகளை தீர்க்க நாம் அதிநவீன யுக்திகளை பெற்றுவிட்டோம்.*

*நம்முடைய போராயுதங்கள் மாம்சத்திற்கு உரியவைகளாய் மாறி விட்டது.*

*நாம் கீழ்க்கண்டவற்றில் நாட்டம் காட்ட முடியும்*

- ✓ *மனித திட்டங்கள்,*
- ✓ *மனித நிகழ்ச்சிகள்,*
- ✓ *மனித யுக்திகள்,*
- ✓ *மனித வழிமுறைகள்,*
- ✓ *மனித அமைப்புகள்*

*இந்த மாய தோற்றத்தினால் மனிதன் தன்னுடைய ஆவிக்குரிய பிரச்சனைகளை தீர்க்க யுக்தி மற்றும் அமைப்புகள் உள்ளன.*

**கவர்ந்திழுக்கும் நடைமுறை *(Charismatic Movement):***
*கவர்ந்திழுக்கும் நடைமுறையில் பரிசுத்த ஆவியானவரின் ஊழியத்தை தவறாக காட்டும் செயல் நடக்கிறது.*

*கிறிஸ்தவன் பரிபூரண படுதலில் பரிசுத்த ஆவியானவரின் முக்கியத்துவும் மற்றும் இன்றியமையாமை போன்றவற்றை புறக்கணித்தனர். பரிசுத்த ஆவியானவரை தவறான முறையில் சித்தரிக்கும் முறையை நாம் காணலாம்.*

*கவர்ந்திழுக்கும் நடைமுறை என்ன செய்தது?*
*அந்த நடைமுறை பரிசுத்த ஆவியானவரை கீழ்கண்டவற்றுடன் சம்பந்தப்படுத்தியது,*

- *இயற்கைக்கு அப்பாற்பட்ட அதிசயம்,*
- *ஒரு வகையான அடையாளம்,*
- *அற்புதம்,*
- *திருத்துவத்தில் அற்புதங்கள் செய்யும் ஒரு நபராக*

*அவர் இப்படிப்பட்ட வெளிப்புறமாக காரியங்களை செய்யும் போது அவைகள் பார்த்து, கேட்டு மற்றும் உணரக்கூடியவை.*

*எனவே அவைகள் கீழ்கண்டவற்றை மேற்கொண்டுவிட்டது/குறைத்துவிட்டது*

- *உட்புறமான காரியங்கள்,*
- *சுத்திகரிக்கப்படுதல்,*
- *தேவை இல்லாதவற்றை வெளியேற்றுதல்,*
- *இருதயத்தில் தேவனின் ஆவியானவர் செய்யும் சுத்திகரிப்பு.*

*அவர்கள் பரிசுத்த ஆவியானவரை ஏதோ விளக்கிற்குள் இருக்கும் ஜீனி பூதத்தை போல் ஆக்கிவிட்டார்கள். அலாவுதீன் அற்புத விளக்கு போல்!*

*அவர்கள் மதம் என்னும் பாட்டிலை குலுக்கி பரிசுத்த ஆவியானவரை வெளியே எடுத்து பிறகு, பரிசுத்த ஆவியானவர் அவர்களுக்கு என்ன செய்ய வேண்டுமோ அதை செய்ய சொல்கின்றனர். ஜீனி அற்புதங்களும் அடையாளங்களும் செய்வது போல் ''பரிசுத்த ஆவியானவரே இதை செய்யும்,எனக்கு இது வேண்டும், நான் இதை செய்யும் படி கட்டளை கொடுக்கிறேன்'' என்கின்றனர். என்ன ஒரு பரிதாபம்!*

*வெளிப்பிரகாரமான அற்புதங்கள் மற்றும் அடையாளங்கள் மேல் கவனம் செலுத்தி, ஒரு பாவியை பரிசுத்தவனாய் மாற்றும் அவரின் வல்லமையை புறக்கணிக்கின்றனர்.*

*இது மற்றொரு பேரழிவின் தீங்கு.*
*வேதாகம கிறிஸ்தவர்களான நாம் பரிசுத்த ஆவியானவரின் கோட்பாட்டை விலக்கி மாற்றி அமைத்துவிட்டோம்.*

*தேவனுடைய ஆவியின் ஊழியத்தை உறுதியாகக் கையாள நாம் விரும்பவில்லை. பரிசுத்த ஆவியானவரை பற்றிய தவறை திருத்தும்போது யாரோ ஒருவர் காயப்பட்டு விடுவார்கள் என்பதற்காக சத்தியத்தை பேச நாம் பயப்படுகிறோம்.*

*பாரம்பரிய வேதாகமத்தை சார்ந்த சுவிசேஷ சபைகளில் இருந்து பரிசுத்த ஆவியானவர் மறைந்தே போய் விட்டார்.*

*அவரை குறித்து*

- *பேசுவது குறைந்தது,*
- *உரையாடுவது குறைந்தது,*
- *கற்பிப்பது மற்றும்*
- *போதிப்பது குறைந்து விட்டது.*

*பரிசுத்த ஆவியானவரின் ஊழியத்தை குறித்து மிக சரியாக, குறிப்பாக பேசுபவர்களை நான் காண்பது மிக சொற்பம். பரிசுத்த ஆவியானவரை குறித்த ஒரு முழுமையான தெளிவான வேத பாடத்தை நாம் பார்த்து இருக்கிறோம்.*

***உளவியல் ரீதியாக சுத்திகரிக்கப்படுத்தல் (Physcological)***

ஆவிக்குரிய பிரச்சனைகளுக்கு இது ஒரு புதிய அணுகுமுறை, இது மனிதர்களின் கோட்பாடு மற்றும் தன்மையிலிருந்து வந்தது.

உங்கள் பிரச்சனைகளுக்கு தீர்வு வேண்டுமானால் நீங்கள் ஆலோசகரை தேடி செல்லவேண்டும் என்று இது போதிக்கிறது. அந்த ஆலோசகர் உங்களின் உள்ளார்ந்த பிரச்சனைகளை தீர்க்க உங்களோடு நல்ல உறவு வைத்துக்கொண்டு, உங்களுக்கான தீர்வை உங்களுக்குள்ளேயே தோண்டி எடுக்க உதவி செய்வார்.

அந்த ஆலோசகர் தீர்வை உங்களுக்குள்ளேயே கண்டுபுடிக்க உதவி செய்வார்.

தேவனுடைய வார்த்தையை பின்பற்றி, ஜெபம் செய்து பரிசுத்த ஆவியானவரால் பயன்படுத்த படும் அருமையான ஆலோசகரும் இருக்கின்றனர் அதை இங்கு பதிவு செய்ய விரும்புகிறேன். ஆலோசனை தரும் வரம் என்பது பரிசுத்த ஆவியானவர் தமது விசுவாசிகளை வழிநடத்தும் ஒரு அற்புதமான ஆசீர்வாதமான கிரியை இது. நாம் ஒருவருக்கொருவர் உதவி செய்து, உற்சாகப்படுத்தி எல்லா பொறுப்புகளையும் நிறைவேற்ற வேண்டும்.

தேவனுடைய வார்த்தையின் மூலமாய் மக்கள் தேவனுடைய பிரசன்னத்தில் வர உதவி செய்யும் ஆலோசகர்கள் உள்ளனர். அவர்கள் அதை ஜெபம் மற்றும் வேதத்தின் மூலம் ஆலோசனை கொடுப்பது ஒரு அற்புதமான காரியம்.

என்னை பாதிக்கும் காரியம் என்னவென்றால் சுத்திகரிக்கப்படுவதற்கு வேதத்தில் இல்லாத மற்றும் பரிசுத்த ஆவியானவருக்கு சம்மந்தம் இல்லாமல் வரும் வெளிப்பாடுகள் தான். வேதாகம கல்லூரிகளில் சில

*கோட்பாடு பாடங்கள் உளவியல் சம்மந்தப்பட்ட காரியங்களால் மாற்றப்பட்டுள்ளது. வேதம் வலியுறுத்தும் காரியங்கள் உளவியல் காரியங்களால் வலியுறுத்தப்பட்டு வருகிறது. இப்பொழுது உள்ள பாடத்திட்டங்களில் பரிசுத்த ஆவியானவரின் ஊழியத்தை குறித்து கொஞ்சமும் பாதிக்கப்படுவது இல்லை.*

- *சுய பெருமை (தன்னை குறித்து உயர்வாக எண்ணுவது),*
- *சுய மதிப்பு,*
- *மனிதனை மையமாக கொண்டு மற்றும்*
- *மனிதனால் தோன்றிய கோட்பாடுகள்.*

*இப்படிபட்ட கண்ணோட்டங்கள் மக்களை தன்னுடைய திறன்களில் நம்பிக்கை உள்ளவர்களை மாற்றியதே தவிர பரிசுத்த ஆவியானவரை சார்ந்து கொள்ள வைக்கவில்லை.*

*தாவீதுடைய வாழ்க்கையிலிருந்து ஒரு உதாரணத்தை காண்போம். நாம் ஏற்கனவே ராஜா தாவீதின் முழு வாழ்க்கையை குறித்த பாடத்தை கண்டோம்.*

***நீங்கள் சங்கீதம் புஸ்தகம் முழுவதும் வாசிக்கும் போது என்ன காண்கிறீர்கள்?***

*ஒரு மனிதன் வாழ்கையில் நாம் கற்பனை செய்து பார்க்க கூடிய எல்லா பிரச்சனைகளையும் எதிர்த்து போராடுவதை காண முடியும்.*

- *சந்தோசமான நேரங்கள்,*
- *சோகமான நேரங்கள்,*
- *உள்ளார்ந்த காயங்கள்,*

- *துரோகம்,*
- *ஒழுக்க கேடானவை,*
- *விபச்சாரம்,*
- *கொலை,*
- *குற்ற உணர்வு,*
- *போர் நேரங்கள்,*
- *மகிழ்ச்சியான தருணங்கள்,*
- *இழந்த நேரங்கள்,*
- *எதிரியிடமிருந்து ஓடியவை,*
- *தன்னுடைய சொந்த மகனே கொலை செய்ய முயற்சித்த போது தப்பி ஓடுதல்.*

*ஒரு மனிதன் சந்திக்க கூடிய எல்லா விதமான பிரச்சனைகளிலும் தாவீது சென்றார்.அதற்கு தீர்வு என்ன?*

*தாவீது எழுதிய சங்கீதம் அதற்கான தீர்வை கூறுகிறது.*

***தாவீது தன்னுடைய பிரச்சனைகளுக்காக யாரிடம் சென்றார்?***

*ஒவ்வொரு சங்கீதத்தை தொடர்ந்து அடுத்த சங்கீதத்திலும் தாவீது தேவனிடம் செல்கிறார். அவர் எப்போதும் தேவனிடம் தான் சென்றார்.*

*அவர் தன்னுடைய இருதயம் மற்றும் தேவனுடைய சுவாபம் இதற்கிடையில் போராடிக்கொண்டு இருந்தார்.*
*அவர் சொல்லுகிறார்,*
*" உம்முடைய நாமம் பரிசுத்தம் மற்றும் மகத்துவமானது.",*
*" அது என்னை சுத்திகரித்து பரிசுத்த படுத்துகிறது."*

*அவர் தன்னுடைய உணர்வுகளை ஒளித்து வைக்காமல் அப்பிடியே தேவனிடம் வெளிப்படுத்துகின்றார். அவர் ஆண்டவரிடம் கதறி அழுது, என்னை தண்டிக்க எல்லா உரிமையும் உமக்கு உள்ளது ஆண்டவரே என்று தன்னை அர்ப்பணிப்பதை நாம் காணமுடிகின்றது. ஆனால் அவர் மிகவும் ஆழமான மற்றும் வலி மிக்க போராட்டத்தை தேவனுடன் போராடிக்கொண்டுதான் இருந்தார்.*

*சிலநேரங்களில் சங்கீதத்தின் முடிவில் நீங்கள் ஒரு வழியை காண முடியும், சில நேரங்களில் இல்லை. ஆனால் அவர் எப்போதும் ஆண்டவரிடம் செல்வார் ஆண்டவரின் இறையாண்மை மற்றும் மனிதர்களின் ஒழுக்கக்கேடு அவருக்கு தெரியும். அவருக்கு தன்னுடைய பிரச்சனைக்காக யாரிடம் செல்ல வேண்டும் என்று தெரியும்.*